# සීමා නිර්ණය කොමිෂන් සභාව

# எல்லை நிர்ணய ஆணைக்குழு

**DELIMITATION COMMISSION**

කාර්තුමය ප්‍රගති වාර්තාව

**2017 – 2 වැනි කාර්තුව**

**காலாண்டு செயலாற்றுகை அறிக்கைகள்**

2017 - 2ம் காலாண்டு

# Quarterly Performance Report
# 2017 – 2nd Quarter

# இலங்கை எல்லை நிருணய ஆணைக்குழு
# 2017 இரண்டாம் காலாண்டு அறிக்கை
# (2017 ஏப்ரல் 1 தொடக்கம் யூன் 30 வரை)

**அறிமுகம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கமைய தாபிக்கப்பட்ட எல்லை நிருணய ஆணைக்குழு கலாநிதி கே. தவலிங்கம் அவர்களை அதன் தவிசாளராகவும், கலாநிதி ஏ.டி.பண்டாரநாயக்க மற்றும் பேராசிரியர் எஸ்.எச். ஹஸ்புல்லாஹ் ஆகியோர்களை அங்கத்தவர்களாகவும் கொண்டு 2015 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி தொடக்கம் செயற்பட்டுவருகின்றது.

எல்லை நிருணய ஆணைக்குழு அதன் அலுவலகத்தை தாபித்து அதன் சிறந்த செயற்பாடுகளுக்குத் தேவையான பணியாட் குழுவினரையும் நியமனம் செய்து கொண்டது. **“நெறிமுறை மற்றும் நியாயமான கோட்பாடுகளிள் அடிப்படையில் எல்லைகளை நிர்ணயம் செய்வதில் சிறந்து விளங்குதல்”** என்பதை ஆணைக்குழுவின் நோக்காகவும் “**அரசியல் யாப்பினால் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளவாறு சுயாதீனமாகவும், நெறிமுறையுடனும், நியாயமாகவும், வினைத்திறனுடனும், வெளிப்படைத்தன்மை கொண்டதாகவும், விசுவாசமாகவும் மற்றும் சட்டரீதியானதாகவும் எல்லைகளை நிர்ணயம் செய்தல்.** என்பதை அதன் பணிக்கூற்றாகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும் ஆணைக்குழு அதன் பணிகளை “சட்டத்திற்கு இசைவாகவும் சுயாதீனமாகவும், ஒழுக்கமாகவும், வினைத்திறன்மிக்கதாகவும், தூர நோக்குடனும் மற்றும் விசுவாசமாகவும் அடைந்து கொள்வதற்கு” முயற்சிகளை மேற்கொள்ளும்.

மேலும் இந்நாட்டு மக்களின் சனநாயக உரிமைகளை பயனுள்ள வித்தில் பாதுகாத்தல் மற்றும் அச்சூழலை பாதுகாக்கும் நோக்குடன் **அ)** அரசியல் பிரதிநிதித்துவம், பிரசைகளுக்கு நிருவாக மற்றும்∴ அல்லது சமூக – பொருளாதார சேவைகளான கல்வி, சுகாதாரம் அல்லது பாதுகாப்பு வழங்குவதற்காக குறித்த காலப்பகுதியினுள் பூகோள எல்லைகளை அடையாளப்படுத்திக் கொடுத்தல் **ஆ)** அரசாங்கத்தின் வேறு நிறுவனங்களுக்குத் தீர்மானங்களை எடுப்பதை இலகுபடுத்துவதற்காக எல்லை நிருணயம் தொடர்பான அறிவு மற்றும் தேவையான தகவல்களை வழங்குதல் **இ)** எல்லை நிருணயம் தொடர்பான தகவல்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய தகவல் நிலையமொன்றை உருவாக்குதல் ஆகிய குறிக்கோள்களை அடைந்து கொள்வதற்கு ஆணைக்குழு செயற்படும்.

ஆணைக்குழு தனது எல்லை நிருணய பணிப்பொறுப்புக்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான அதிகாரங்கள் கிடைக்கும் வரை எதிர்பார்ப்போடு உள்ளது.

**2017 இரண்டாம் காலாண்டு அறிக்கை**

2017 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் யூன் மாதம் 30 ஆம் திகதி வரையான மும்மாத அறிக்கையில் ஆணைக்குழு எடுத்த தீர்மானங்களும் ஆற்றிய பணிகளும் காட்டப்பட்டுள்ளன. அக்காலப்பகுதியினுள் ஆணைக்குழுவின் 2 கூட்டங்கள் நடாத்தப்பட்டதோடு முக்கிய பணிகள் பலவும் ஆற்றப்பட்டன.

**எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் கூட்டங்கள்**

இரண்டாம் காலாண்டினுள் இரண்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

1. 2017.04.05 ஆம் திகதி 19 ஆம் கூட்டம்

2 .2017.06.28 ஆம் திகதி 20 ஆம் கூட்டம்

**ஏனைய கூட்டங்கள்**

**1. 2017.05.07 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களுடன் நடாத்தப்பட்ட கூட்டம் :** அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களின் முன்னேற்றம், பிரச்சினைகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக அதிமேதகு சனாதிபதி அவர்களால் அவற்றின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு ஆணைக்குழுக்களதும் முன்னேற்றம் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக அனைத்து ஆணைக்குழுக்களதும் தவிசாளர்கள் அதிமேதகு சனாதிபதி அவர்களிடம் விடயங்களை முன்வைத்தனர்.

**2. 2017.05.29 ஆம் திகதி சனாதிபதியின் செயலாளருடன் நடாத்தப்பட்ட கூட்டம்:** 2017.05.07 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதி அவர்களுடன் நடாத்தப்பட்ட கூட்டத்தின் பின்னர் சனாதிபதியின் செயலாளர் அவர்களால் அக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பாக மேலும் கலந்துரையாடுவதற்காக 2017.05.29 ஆம் திகதி சுயாதீன ஆணைக்குழுக்களின் செயலாளர்கள் அழைக்கப்பட்டிருந்தனர்.இக்கூட்டத்தின் போது எல்லை நிருணய ஆணைக்குழு சட்டமொன்றுக்கான வரைவு முன்மொழிவொன்றைத் தயாரிக்குமாறு எல்லை நிருணய ஆணைக்குழுவின் செயலாளருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

3. **2017.05.30 ஆம் திகதி கௌரவ சபாநாயகருடன் நடாத்தப்பட்ட கூட்டம்:**

அனைத்து சுயாதீன ஆணைக்குழுக்களின் முன்னேற்றம் மற்றும் பிரச்சினைகள் தொடர்பாக கௌரவ சபாநாயகர் ஆணைக்குழுக்களின் தவிசாளர்கள் மற்றும் செயலாளர்களுடன் கலந்துரையாடினார். சனாதிபதியின் செயலாளர் அவர்கள் அறிவுறுத்தல் வழங்கியவாறு எல்லை நிருணய ஆணைக்குழு சட்டமொன்றுக்கான வரைவை விரைவில் சமர்ப்பிப்பதற்கு எல்லை நிருணய ஆணைக்குழுவினால் நடவடிக்கையெடுக்கப்படுமென எல்லை நிருணய ஆணைக்குழுவின் தவிசாளர் இக்கூட்டத்தின் போது தெளிவுபடுத்தினார். சுயாதீன ஆணைக்குழுவிற்குத் தேவையான கட்டிடத் தொகுதி தொடர்பாக கலந்துரையாடப்பட்ட போது எல்லை நிருணய ஆணைக்குழுவின் எதிர்கால பணிப்பொறுப்புக்களுக்கு ஏற்றவித்தல் தேவையான இடவசதிகளைப் கோருமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

**நிருவாக அலுவல்கள்**

1. **உத்தியோகபூர்வ அடையாள அட்டை :** தவிசாளர் அவர்களுக்கும் ஆணைக்குழுவின் அங்கத்தவர்களுக்கும் பணியாட் குழுவினருக்கும் உத்தியோகபூர்வ அடையாள அட்டைகள் விநியோகிப்பட்டன.

2. **நிருவாக அலுவலர்:** 2017.06.01 ஆம் திகதி திரு. எச்.டீ. ஜயசிறி அவர்கள் கடமைக்கு அறிக்கையிட்டார்.

3. **எல்லை நிருணய ஆணைக்குழுவிலிருந்து விடைபெற்றுச் செல்லும் செயலாளரின் சேவையை மெச்சும் கடிதம் :** அவரினால் எல்லை நிருணய ஆணைக்குழுவிற்காக ஆற்றப்பட்ட பெறுமதிமிக்க பணிகளைப் பாராட்டி கடிதமொன்று 2017 ஆம் ஆண்டு மே மாதம் நடுப்பகுதியில் அனுப்பி வைக்கப்பட்டது.

**ஆற்றப்பட்ட பணிகள்:**

1. **2016 ஆம் ஆண்டின் செயலாற்றுகை அறிக்கை:** 2016 ஆம் ஆண்டின் செயலாற்றுகை தொடர்பான முழுமையான அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு பாராளுமன்றத்திற்கும் அரசியலமைப்பு பேரவைக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. இங்கு எல்லை நிருணய ஆணைக்குழுவின் அதிகாரங்கள் மற்றும் பணிப்பொறுப்புக்கள் மற்றும் நியமனங்களைச் செய்வதற்கான யாப்பு ஏற்பாடுகள், எல்லை நிருணய ஆணைக்குழுவிற்கு பணியாட் குழுவினரை நியமனம் செய்தல், எல்லை நிருணய ஆணைக்குழுவின் நிதி அலுவல்கள் மற்றும் செலவுகளை உள்ளடக்கிய மும்மாத செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தல், 2016 ஆம் ஆண்டினுள் எல்லை நிருணய ஆணைக்குழு எடுத்துள்ள முக்கிய நடவடிக்கைகள் ஆகிய விடயங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் மற்றும் எல்லை நிருணய ஆணைக்குழுவிற்குரிய ஏனைய விடயங்களும் வருடாந்த அறிக்கையில் உட்சேர்க்கப்படன.

2. **மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளின் உள்ளூர் அதிகார சபைகளைத் தாபித்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களைச் சேகரித்தல் :** தமது நிறுவனங்களைத் தாபித்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களைச் சமர்ப்பிக்குமாறு முதலாவது காலாண்டின் போது அனைத்து உள்ளூர் அதிகார சபைகளுக்கும் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டன. யூன் மாதம் இறுதிப் பகுதி வரை கிடைக்கப்பெற்றுள்ள பதில்கள் அட்டவணை 1 காட்டப்பட்டுள்ளது.

| **அட்டவணை 1 : 2017 யூன் மாதம் இறுதி வரை கிடைக்கப் பெற்ற வர்த்தமானி அறிவித்தல்கள்** | | | | |
|---|---|---|---|---|
| | **மாநகர சபைகள்** | **நகர சபைகள்** | **பிரதேச சபைகள்** | **மொத்தம்** |
| உள்ளூர் அதிகார சபைகளின் எண்ணிக்கை | **22** | **42** | **272** | **336** |
| கிடைக்கப் பெற்ற வர்த்தமானி அறிவித்தல்களின் எண்ணிக்கை (சிங்களம்) | **22** | **42** | **272** | **336** |

3. **பிரதேச செயலகங்களைத் தாபித்தல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்களைச் சேகரித்தல்:**

தமது பிரதேச செயலகப் பிரிவுகள் தாபிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தல்களின் நிழற் பிரதிகளை அனுப்பி வைக்குமாறு பிரதேச செயலகங்களுக்கு அறிவிக்கப்பட்டது.கிடைக்கப்பெற்ற பதில்கள் மிகவும் குறைவானதாகும்.அதனால் மீண்டும் நினைவூட்டுவதற்கு எல்லை நிருணய ஆணைக்குழுவிற்கு நேரிட்டது. யூன் மாதம் இறுதிப்பகுதி வரை கிடைக்கப் பெற்றுள்ள பதில்கள் அட்டவணை 2 காட்டப்பட்டுள்ளது.

| **அட்டவணை 2 : 2017 யூன் மாதம் இறுதி வரை கிடைக்கப் பெற்ற வர்த்தமானி அறிவித்தல்கள்** | |
|---|---|
| | **மொத்தம்** |
| பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை | **331** |
| கிடைக்கப்பெற்ற வர்த்தமானி அறிவித்தல்களின் எண்ணிக்கை (சிங்களம்) | **127** |

**எதிர்காலத்திற்காக திட்டமிடப்பட்டுள்ள அலுவல்கள்:**

காலாண்டின் இறுதிக் கூட்டத்தின் போது திட்டமிடப்பட்டு இரண்டு செயற்பாடுகள் கலந்துரையாடப்பட்டன. அவை பின்வருமாறு.

1. **வரைவு கொள்கைப் பிரகடனம் :** உத்தேச எல்லை நிருணய ஆணைக்குழுவின் சட்டத்திற்குத் தேவையான வரைவு கொள்கைப் பிரகடனம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. இங்கு கொள்கைப் பிரகடனத்தின் உள்ளடக்கம் மற்றும் அதனை தயாரிக்கும் போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக எல்லை நிருணய ஆணைக்குழுவினால் கலந்துரையாடப்பட்டது.

2. **அமுலாக்கல் திட்டம்** : இந்தக் காலாண்டின் போது அமுலாக்கல் திட்டம் தயாரிக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டது (இணைப்பைப் பார்க்கவும்)